பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

When, only
The best is
Good Enough



By
Solide Pumps

# உதயன்

விலை ரூ 2/-

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ ஐப்பசி மீ 22 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 26 (07 11 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 229

ஜே. வி. பியினர் எனச் சந்தேகிக்கப்படும்

# 156 கைதிகள் தப்பினர்!

# தடுப்பு முகாமிலிருந்து!!

## சுரங்கப் பாதை அமைத்து

கொழும்பு. நவம்பர் 7

பெல்வத்தை இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தென்னிலங்கைத் தீவிரவாதச் சந்தேக நபர்கள் 156 பேர் தப்பிச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாமிற்குள் இருந்து சுரங்கப்பாதை ஒன்றை அமைத்து அதன் வழியாக அவர்கள் தப்பிச் சென்றனர் என ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

தென் இலங்கையில் வளர்ந்துவரும் ஜே. வி. யின் செல்வாக்கை இந்தச் சம்பவம் மேலும் பலப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது என்றும் கூறப்பட்டது.

இதேசமயம் கடந்த 24 மணித்தியாலங்களில் தென்பகுதியில் 12 பேர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அவர்களில் இரண்டு பேர் பொலீஸார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

தென் ஆபிரிக்கச் சிறையில் வாடும்

## நெல்ஸன் மண்டேலா 14ஆம் திகதி விடுதலை!

கேப்டவுண், நவ 7

தென் ஆபிரிக்கச் சிறையில் 25 ஆண்டுகளுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தென் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் நெல்ஸன் மண்டேலா எதிர்வரும் 14 ஆம் திகதி விடுதலை செய்யப்படுவார்.

அவருடன் மேலும் 5 கறுப்பு இனத்தலைவர்களும் விடுவிக்கப்படுவர் என்று தென் ஆபிரிக்காவில் பத்திரிகைகள் தெரிவித்தன

மண்டேலாவின் விடுதலை குறித்து, அமெரிக்காவில் உள்ள சிவில் உரிமை ஆயக்கத் தலைவர் ஜெஸிஜாக்சன் தென் ஆபிரிக்க அரசுடன் பேச்சுக்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## கோப்பாயில் நேற்று குண்டு வெடித்தது

கோப்பாய், நவ 7

நேற்றுக் காலை 6.30 மணியளவில் கோப்பாய்—உரும்பராய் வீதியில் அமைதிப் படை முகாமிலிருந்து சற்றுத் தூரத்தில் குண்டு ஒன்று வெடித்தது.

இதன் பின்னர் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் வயோதிபர் ஒருவரும் வேறு சிலரும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

இச் சம்பவத்தைத் தொடர்ந்து சாண்டலவதகை, இராசம்பு, அப்பிளாவை ஆகிய பகுதிகளில் அமைதிப் படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்,

இதன் காரணமாக

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பஸ் நிலைய கடை உரிமையாளர் மீது சூடு!

யாழ்ப்பாணம், நவ. 7

நேற்று நண்பகல் 2 மணியளவில் யாழ். பஸ் நிலையப் பகுதியில் உள்ள புடைவை விற்பனை நிலையமொன்றில் இருந்த அதன் உரிமையாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் தெய்வாதீனமாக அவர் காயம் ஏதுமின்றித் தப்பினார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து குறிப்பிட்ட கடை மூடப்பட்டது. (உ-9)

முச்சந்தி முரளி



அப்ப அங்காலை ஹர்த்தால் காய்ச்சல் அடிக்குதுபோலை ...!

**சுபநேரம்**

07- 11 - 1988
ஐப்பசி 22
திங்கட்கிழமை
சுபநேரம்:-
12 05 முதல் 1-35வரை
ராகுகாலம்:-
7-35 முதல் 9-05 வரை

## இன்று முதல் 3 நாட்களுக்கு தெற்கில் ஹர்த்தால்

### ஜே.வி.பி. இயக்கம் அழைப்பு

கொழும்பு, நவ.7

இன்று முதல் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு வேலை நிறுத்தம் மற்றும் ஹர்த்தால் நடவடிக்கைகளில் ஈடுபடும்படி தென்பகுதி மக்களை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி பி) கேட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கையாகவே இந்த ஹர்த்தால் அழைப்பை ஜே.வி.பி விடுத்திருக்கிறது. (உ எ)

## நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு நிபந்தனை

### சிறிமாவிடம் ஜே. ஆர். தெரிவிப்பு

நாடாளுமன்றத்தைக் கலைத்து காபந்து அரசாங்கத்தின்கீழ் தேர்தல்களை நடத்துவதற்கு ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா நிபந்தனை விதித்திருக்கிறார்.

காபந்து அரசாங்கத்தில் அங்கம்வகிப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் ரோஹண விஜேவீர இணங்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும்

நேற்று முன் தினம் சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவைச் சந்தித்தபோது ஜனாதிபதி திரு ஜெயவர்த்தனா இந்த நிபந்தனையை அவரிடம் நேரில் தெரிவித்தார்.

1977இல் திரு ஜெயவர்த்தனா பதவிக்கு வந்ததன்பின்னர் அவர் அதிகாரபூர்வமாக சுதந்திரக் கட்சித் தலைவி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# உமையாள்புரத்தில்ரயில்பாதை நேற்று குண்டு வைத்து தகர்ப்பு

## அமைதிப் படையினர் இருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், நவ.7

உமையாள்புரத்தில் நேற்றுக் காலை 9மணியளவில் ரயில்பாதை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் போது ரயில் பாதையருகே காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இந்திய அமைதி காக்கும் படையினர் இருவர் கொல்லப்பட்டதாகவும், சிலர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

பரந்தனுக்கும் ஆனையிறவுக்கும் இடையே உமையாள்புரத்தில் ரயில்பாதை தகர்க்கப்பட்ட சமயம்கொழும்பு-யாழ் வார இறுதி விசேட பயணிகள் ரயில் பரந்தன் ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு ஆனையிறவை நோக்கி வந்து கொண்டிருந்தது.

20 அடி நீளபாதைகுண்டு வெடிப்பினால் சேதமுற்றதை அடுத்து ரயில் பாதையின் இருமருங்கிலும் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த அமைதிப் படையினர் சம்பவம் நடந்த இடத்தை நோக்கிப் பயணிகள் ரயிலைச் செல்ல விடாது இடையில் ஒருவாறு தடுத்து நிறுத்தினர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இரு அமைதிப்படையினரின் சடலங்கள் அவ்வழியே வந்த தனியார் மினிபஸ்ஸில் எடுத்துச் செல்லப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கூலிப்படையினர் சரண் அடைந்தனர்

கொழும்பு. நவ 7

மாலைதீவிலிருந்து தப்பி 'புரோகிரஸ்லைட்' என்ற மாலைதீவுச் சரக்குக் கப்பலில் இலங்கை நோக்கி வந்து கொண்டிருந்த கூலிப்படையினர் 46 பேர் நேற்றுக் காலை 9.25 மணிக்கு இந்தியப் படையினரிடம் சரணடைந்தனர்.

இலங்கையின் தென் மேற்குப் பக்கத்தில் 96 கிலோ மீற்றர் தொலைவில் கடலில் இந்திய யுத்தக் கப்பல்களான ஐ என் எஸ் மேட்டுவா, ஐ. என் எஸ் கோதாவரி ஆகியன இச் சரக்குக் கப்பலைச் சுற்றி வளைத்துப் பிடித்தன

'கோதாவரி' யுத்தக் கப்பலில் இருந்து புறப்பட்ட ஹெலிக்கொப்டர்கள் தாழ்வாகப் பறந்து சென்று கூலிப்படையினரின் மீது எச்சரிக்கை ரொக்கட்டுக்களை வீசிச் சுட்டன.

அதைத் தொடர்ந்து கூலிப்படையினர் சரணடைய முன் வந்தனர். (உ-எ)

## பணயக் கைதிகள் மீட்பு

மாலே, நவ. 6

மாலைதீவில் புரட்சியில் ஈடுபட்ட கூலிப்படையினர் சரணடைந்ததை அடுத்து அவர்களினால் பணயம் வைக்கப்பட்ட மாலைதீவு போக்குவரத்து அமைச்சரும் அவர்ன் சுவீடிஷ் மனைவி உட்பட 20 பணயக் கைதிகள் மீட்கப்பட்டனர்

இதனிடையே பணயக் கைதிகளில் நால்வர் இறந்தனர் என்றும் பலர் காயமடைந்தனர் என்றும் மூவரைக் காணவில்லை என்றும் புதுடில்லியில் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சரக்குக் கப்பலில் இருந்த பணயக் கைதிகளை மீட்கும் முன்னரே நான்கு பணயக் கைதிகள் உயிரிழந்தனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்

காயமடைந்த பணயக் கைதிகளில் மாலைதீவ போக்குவரத்து அமைச்சரும் அவரின் சுவீடிஷ் மனைவியும் அடங்குகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது

காயமடைந்த மாலைதீவு அமைச்சரும் அவரின் மனைவியும் இந்தியவிமானமூலம் திருவனந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## கூலிப்படையினர் மீது நீதிமன்ற விசாரணை!

### மாலேயில் நடக்குமு என்கிறார் கையூம்

சதி முயற்சியில் ஈடுபட்ட கூலிப்படையினர் அனைவரும் மாலேயின் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்

மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கையூம் இதனை நேற்று அறிவித்தார்.

கூலிப்படையினர் சரணடைந்தபோது சரக்குக் கப்பலில் இருந்தவர்களில் மூவர் காயமடைந்தனர். அவர்கள் கூலிப்படையைச் சேர்ந்தவர்களா அல்லது பணயக் கைதிகளா என்பது

(6ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடு எதுவும் சம்பந்தப்படவில்லையாம்

மாலே, நவ 6

மாலைதீவு அரசைக் கவிழ்க்க நடந்த புரட்சி முயற்சியில் வெளிநாடுகள் சம்பந்தப்படவில்லை என்று ஜனாதிபதி மாமூன் அப்துல் கையூம் அறிவித்தார்

சதி முயற்சியில் ஈடுபட்ட அனைத்துக் கூலிப் படையினரையும் கைது செய்யும்வரை இந்தியப் படையினர் மாலைதீவில் தங்கியிருப்பர் என்றும் ஜனாதிபதி கையூம் தெரிவித்தார்

சதிமுயற்சியின் பின்னால் எந்த சக்திகள் இருந்தன என்பதுபற்றி என்னால் ஊகிக்க முடியவில்லை ஆனால் வெளிநாடுகள் இதில் சம்பந்தப்படவில்லை—இப்படி அவர் மேலும் தெரிவித்தார்

## இலங்கைப் படையும் மாலைதீவு செல்லவிருந்தது

கொழும்பு. நவ 7

நூற்றைம்பது இலங்கை அதிரடிப்படை கமாண்டோக்கள் கடந்த வியாழன் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து மாலைதீவுக்கு இரண்டு சீன தயாரிப்பு விமானங்களில் செல்லத் தயாராக இருந்தனர்.

மாலைதீவுக்கு இலங்கைப் படையை அனுப்ப வேண்டாம் என்று இந்திய அரசு சொன்னதைத் தொடர்ந்தே இலங்கைப் படை மாலைதீவு போவது நிறுத்தப்பட்டது என்று தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் கமாண்டோப்படையை மாலைதீவுக்கு அனுப்ப வேண்டாம் என்று முப்படைகளின் தளபதிகள் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினர் என்றும் அறிவிக்கப்படுகிறது (உ-எ)

## கொலை முயற்சி!

போர்ட்லூயி நவ 7

மொரிஷியஸ் பிரதமர் அனிருட் ஜக்னாத் கொலை முயற்சியில் இருந்து நேற்று மாலை மயிரிழையில் உயிர் தப்பினர்.

அவர் மீது சுட்டதாகக் கூறப்படும் இந்து மதகுருவை பொலீஸார் கைதுசெய்தனர்

பிரதமருடன் அவரின் மனைவியும் சம்பவம் நடந்தஇடத்தில்இருந்தார். இருவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

பிரதமரின் மெய்ப் பாதுகாவலர் ஒருவர் காயமடைந்தார்.

## ஜவான் மரணம்

திருகோணமலை, பன்மதவாச்சியில் புதரில் மறைந்து இருந்து ஒருவர் வீசிய குண்டு வெடித்து இந்திய அமைதிப்படை ஜவான் ஒருவர் உயிரிழந்தார் என்று இந்திய வானொலி அறிவித்தது (எ)

## பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும்

வடமேற்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளும் இன்று மூடப்பட்டிருக்கும்

இது சம்பந்தமான உத்தரவை மேற்கு மாகாண முதலமைச்சர் நேற்றுப் பிறப்பித்தார். உ-எ)

## கடல் உணவுக்கு பெரும் கிராக்கி

குருநகர், நவ 7

குடாநாட்டில் மீன்பிடித்தடை நடைமுறைப்படுத்தப்பட்டதை அடுத்து கடல் உணவுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

யாழ் நகரில் கடல் உணவு பெருமளவில் விற்பனை செய்யப்படும் குருநகர் மீன்சந்தை நேற்று வெறிச்சோடிக் கிடந்தது

கருவாடு இறைச்சிக் கோழி மற்றும் ஆட்டிறைச்சி மாட்டிறைச்சி போன்றவை நேற்று சந்தையில் பெருமளவில் விற்பனை ஆகின.

மிகக் குறைந்த அளவில் சந்தைக்கு வந்த மீன் வகைகள் அதிக விலைக்கு விற்கப்பட்டன. [உ-51]

## வெலிக்கடை சிறைச்சாலை உடைப்பு!

கொழும்பு, நவ 7

வெலிக்கடை சிறையில் சுமார் 2 ஆயிரம் கைதிகள் நேற்று சிறைகளை உடைத்துக் கொண்டு வெளியேறியதாகக் கூறப்படுகிறது

கைதிகள் தப்பிக்க முடியாதவண்ணம் பாதுகாப்புப் படையினர் சிறைச்சாலையைச் சூழ்ந்து நிற்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஜே வி பி. க்கு ஆதரவாகவும் அரசாங்கத்தை இராஜினாமாச் செய்யக் கோரியும் இந்த நடவடிக்கையில் சிறைக்

(6ஆம் பக்கம் பார்க்க

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக்கோழி. விருத்துக்குஞ்சு, கோழி முட்டை, கோழித்தீன் வகை தொகையாகவும் சில்லறையாகவும் சகாய விலையில் எப்போதும் பெற்றுக்கொள்ளலாம். பாம்ஹவுஸ் கோட் ரோட், மல்லாகம். (7921)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Show - case கட்டில், கதிரைகள், ஹோல் செற், கபேட் கண்ணாடி மேசை, நேசறி தளபாடம், சாப்பாட்டு மேசை. கதிரைகள், எக்கோடியன் Grinder.Fan, மெலோடிகா கிளாஸ், பித்தளைப் பொருள்களும் உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. D. K. சபாரத்தினம், 35/1, றக்காலேன், யாழ்ப்பாணம். (7150)

ஆட்டுக் கடாக்கள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: உதயா விறகு மரக்காலை 439, இராமலிங்கம் வீதி திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (7733)

சில மாதங்கள் கையிருப்பில் இல்லாதிருந்த உறுதியானதும் உத்தரவாதமும் உள்ள சிங்கர் மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் 'Singer Water Pump' தற்போது விற்பனைக்கு வந்துவிட்டது. சாமுவேல் சன்ஸ் அன்கோ லிமிட், யாழ்ப்பாணம். (C/744)

Honda நீர் இறைக்கும் இயந்திரம் Electric Driller (சுவர் துளைக்கும்) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 211/23, கோவில் வீதி, நல்லூர். (7749)

நல்ல நிலையிலுள்ள 2 Sri Ford Prefectஉம் EY. Morris Minor கார்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: புதிய இல. 608, K K S வீதி. யாழ்ப்பாணம் (7804)

சகல விதமான ரேடியோ, வீடியோ, டெக் T.V ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும் I. C Transistor வீடியோ (Head) அன்ரனா பூஸ்டர் ஆகியவற்றை மலிவான விலையிலும் நம்பிக்கையுடனும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்: R V. சென்ரர், No F6 Model Market. Jaffna உரிமையாளர்; விசு. (7909)

### நாய்க் குட்டிகள் விற்பனை

நல்ல இன அழகிய பொமினேரியன் நாய் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- Dr. V S. ஜெகநாதன் No. 24, இராசகாரியர் வீதி, மானிப்பாய் வடக்கு, மருதடிக்கு அருகில். (7927)

### கோழிக்குஞ்சு விற்பனை

கைலைன், கோல்டன் கொமற்பேடுகள் 12 50. கைசெச்ஸ் 13 50. புறொயிலர் 16/- கறுப்பு, வெள்ளை சேவல் 6/, 3. 50 ஸ்ரீசாயிதுர்க்கா என்ரப்பிரைஸ், நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, திருநெல்வேலி ஸ்ரோர்ஸ், திருநெல்வேலிச்சந்தி. (7926)

### மலிவு விற்பனை

முற்றிலும் புதிய டிசைன்களில் உருவான தீபாவளி வாழ்த்து மடல்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் மச்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி. பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (7601)

### கோழிக் குஞ்சுகள் விற்பனை

பிறிமாயின ஒரு நாள் புறொயிலர்க் குஞ்சுகள் சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் வழங்கப்படும் குஞ்சுகளுக்கு 7 நாட்கள் உத்தரவாதம். பதிவு; 11/6, ஸ்ரான்லி வீதி, திருமகள் ஸ்ரோர்ஸ், சிவலிங்கப்புளியடி, சாயி மெடிக்கல் திருநெல்வேலி சந்தி. (7916)

### தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

## தேவை

பிளாஸ்ரிக்போட் வேலை பழகுவதற்கும், றபர்சீல் வேலைகள் மற்றும் ஓவிய வேலைகள் செய்ய ஆர்வமுள்ள யுவன் யுவதிகள் தேவை நற்சான்றிதழ்களுடன் 10 - 11 - 88 க்கு முன் நேரிலோ கடித மூலமோ விண்ணப்பிக்கவும். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தரன் ஸ்ரூடியோ 9,8, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். போன் 23858 (7918

யாழ் நகரில் ஒரு வீடு வாடகைக்கு தேவை மேல்மாடி வீடுகளும் விரும்பப்படும். முழு விபரங்களுடன் எழுதவும் தொடர்பு; 355, மே/பா, உதயன் யாழ்ப்பாணம். (7915)

அருநெல்லிக்காய், முழுநெல்லிக்காய், விளாம்பழம், மாம்பழம், பனம்பழச்சாறு ஆகியன தேவை. விலையை கலந்தாலோசித்து தீர்மானிக்கலாம். அத்துடன் பாவற்காய் வற்றலும் பெருமளவில் தேவை. தொடர்பு: அ. சத்தியன், 140, நாவலர் ரோட், (மனோகராதியேட்டர் அருகாமை) யாழ்ப்பாணம். (C440

### A/L 90 இரசாயனம்

108 Brown Road. A/L 90 பொது இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் 7-11-88 திங்கள் 4.30 p m திங்கள், புதன் 4.30 to 6 00 p.m (7914)

### தவறிவிட்டது

லிங்கப்பிள்ளை - கணேசமூர்த்தி 551991822 v எனது அடையாள அட்டை யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7925)

### தீபாவளி மலிவு விற்பனை

அரிய சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள்!! (1-11-88 முதல் 9-11-88 வரை) புதிய டிசைன் ஸ்கேட், பிளவுஸ், பேபி சூட், கவுன்கள், பெரியோர், சிறுவர்களுக்குரிய ரெடிமேட் ஆடைகள் Fashion Garments, 20, 22 கடைச்சாமி வீதி. (Off Navalar Road) நீராவியடி, யாழ்ப்பாணம். (7717)

## சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும். எலெக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டுக்கடிதங்கள் Bio-Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும். 'ஷப்ரு' சேவைப் பிரிவு, இல. 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (C/691)

### ரோனியோ

தரமான ரோனியோ பிரதிகளை (தமிழ்/ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் "ஷப்ரு" சேவைப் பிரிவு, இல: 19, 2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C/692)

### சேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு முற்றும். போஸ்ரர் அச்சுவேலைகள், சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். தயா அச்சகம் இல 138, நாவலர் ரோட் மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம். (C 551)

## மண்ணெண்ணெய் முத்திரைகள் வழங்கப்பட்டன

குருநகர், நவ. 7 வண்ணார்பண்ணை மேற்கு, நாவலடி ஒழுங்கையைச் சேர்ந்த குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரைகள் இம்மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை வழங்கப்பட்டன. (இ-51)

## ஐ. தே. க. பிரமுகர் சுடப்பட்டார்

மட்டக்களப்பு, நவ. 7 காத்தான்குடி ப. நோ கூ. சங்கத்தலைவரும் ஐ தே க. பிரமுகருமான ஜனாப் ஏ. கே. அபூபக்கர் (40 வயது) இனந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-21)

## சவூதி அரேபியாவுக்கு உடனடி வேலைவாய்ப்பு

| | சம்பளம் |
|---|---|
| 40 பேர் கனரக சாரதிகள் (H V Drivers) | 750 S.R |
| 400 பேர் கிளீனர்ஸ் | 400 S.R |

வயதெல்லை சாரதிகளுக்கு 24 - 45 வரை
கிளீனர்ஸ் வயதெல்லை 21 - 45 வரை

பத்து (10) நாட்களுக்குள் பயணம் கடவுச்சீட்டுடன் மூன்று கடவுச்சீட்டு சைஸ் போட்டோக்கள். உடன் தொடர்பு கொள்ளவும்.

T. V. TRAVELS & TOURIST
BROWN ROAD,
(Railway Station Front)
KOKUVIL,

(C/758)

## சங்கரத்தை சனசமூக நிலையம்

வட்டுக்கோட்டை, நவ7 சங்கரத்தை சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர், திரு ஆ. சங்கரப்பிள்ளை, உபதலைவர்: திரு ந குமாரசுவாமி செயலாளர்: திரு. சோ. சிதம்பரநாதன், உபசெயலாளர்: செல்வி அ. பத்மினி, பொருளாளர்: க குலசிங்கம், விளையாட்டுப் பொறுப்பாளர்: செல்வன் சி கஜன் வாசிகசாலைப் பொறுப்பாளர்: செல்வன் க. குணச்செல்வன். (ச-ரி)

## வீதி திருத்த வேலைகள்

கரவெட்டி, நவ 7 நீண்டகாலமாக மிக மோசமடைந்திருந்த அச்சுவேலி - தொண்டமானாறு வீதி திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ச-70)

## இரண்டாம் ஆண்டு / முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





திரு. வேலாயுதர் துரையப்பா
தோற்றம்: 15-04-1920
மறைவு: 26-12-1986

திருமதி துரையப்பா பராசக்தி
தோற்றம்: 26-01-1930
மறைவு: 20-10-1987

திதி: 7.11.88


நீங்கள் இறைவனடி சேர்ந்து ஓராயிரம் ஆண்டுகள் போனாலும் எம் துயரம் எம்மை விட்டகலாது அன்பிற்கும், பண்பிற்கும் வாழ்விற்கும் வழிகாட்டியாய் இருந்தீர்கள் உற்றார், உறவினர் உள்ளத்திலும் நிலையாய் இடம் பிடித்திருந்தீர்கள். உங்கள் பிரிவால் வாடுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

7/3, பிரவுண் ரோட்,
1 ஆம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

(7806)

## ஓராண்டு நினைவஞ்சலி



### பாலசிங்கம் ஜெகானந்தராஜா

(ஜெகா)
(ஒப்பந்தக்காரர், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்)

அன்னையின் மடியில்: 13 - 06 - 1956
அழிப்பு: 20 - 10 - 1987

திதி: 07 - 11 - 1988
(திங்கட்கிழமை)

'ஜெகா' உங்கள் அன்பின் ஆழம் எம்மை வாட்டுகிறது! ஓராண்டு காலம் உமைவிட்டு பிரிந்து 'தீபாவளி'த்தினத்தில் ஆறுதுவேதனையில் உழலும் நிலையை யாரிடம் சொல்ல! நிம்மதியாய் நீ உறக்கங்கொண்ட கோலமதை இன்றெமது மனத்திருத்தி நினைக்கின்றோம்! ஜெகாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக!

ஓம் சாந்தி !சாந்தி!! சாந்தி!!!
தாய், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனி
மருமக்கள், பெறுமகள்,
உறவினர்,

23, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(7900)

## ஓர் ஆண்டு நினைவு அஞ்சலி



### தம்பிஐயா நடராசா

(ஈச்சமோட்டை)

தோற்றம்: 19 08-1927
அழிப்பு: 20 10-1987

திதி: 07-11-1988

உங்கள் ஆத்மா சாந்தியடைவதற்கு இறைவனைப் பிரார்த்திப்பதைத் தவிர, உங்களுக்கு எந்தக் கடமையும் செய்ய முடியவில்லையே! என்று வேதனையுறும்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்.
அன்பிற்குரிய
பேரப்பிள்ளைகள், உறவினர்.



### சோமசுந்தரம் ரஜீவன்

(வண்ணார்பண்ணை)

மலர்வு: 22 08 1983
உதிர்வு: 20-10-1987

எங்கள் அன்புச் செல்வமே! எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்டுவிட்டாயே பாலகா! உன் பால்வடியும் முகத்தை இனி எப்போ காண்போம்! உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்,

உன் அப்பா, அம்மா,
அண்ணா, தங்கைகள்,
உறவினர்.

மு.கு:- இன்றைய ஆண்டுத் திதி வைபவத்தில் உற்றார் உறவினர்களை கீழ்க் கண்ட விலாசத்தில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-ராஜினி சோமசுந்தரம்.
28, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை வடக்கு, யாழ்ப்பாணம்.

(7887)

## ஓராண்டு நினைவஞ்சலி





திரு. ச. பஞ்சரத்தினம்
மலர்வு: 16 - 03 - 1931
உதிர்வு: 20 - 10 - 1987

திருமதி ப. புஷ்பராணி
மலர்வு: 26 - 04 - 1936
உதிர்வு: 20 - 10 - 1987

திதி நாள் 07 . 11 . 1988 திங்கடகிழமை
யாவருமே தொழுகின்றார்

ஆண்டொன்று கழிந்ததுதான் அன்புடையீர் உமைநாங்கள்
மாண்டவராய் எண்ணவில்லை மனங்கசிந்தே உருகுகின்றோம்
மீண்டு பஞ்ச ரத்தினமும் மெல்லியல் புஷ்ப ராணியுமே
ஈண்டு வந்தே எம்துயரை எளிதினிலே நீக்கிரோ!

குண்டுபட்ட நேரமதில் குணமிகுந்த சதிபதியாய்
அண்டினவர் துயர்க்கடலில் அழுதழுது பரிதவிக்க
வண்டுமலர்த் தாரமலன் மன்னியநற் றாள்களிலே
கண்டுசுவை கண்டதென கருத்தொத்துச் சென்றீரோ!

உரும்பராய்ப் பஞ்ச ரத்தினமாம் உயராசான்
விரும்புபுஷ்ப ராணியுடன் விண்ணுலகு சேர்ந்தனரே
கரும்புநிகர் நற்றாயார் கனிஇனிய மகள்மகன்மார்
பெருஞ்சுற்றம் சோதரர்கள் யாவருமே தொழுகின்றார்-

உமது பிரிவால் துயருறும்:
அம்மா மகள், மகன்மார், மருமக்கள், சோதரர்கள்,
மச்சான்மார், மச்சாள்மார். உற்றார், உறவினர்கள்.

உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

(7746)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

## ஞானசம்பந்தர் இல்லம்

### பாதிப்புற்ற சிறுர்களுக்கான பராமரிப்பு நிலையம்

### உரும்பராய்.

இவ்வில்லத்துக்குக் கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பராமரிப்பாளர் (Matron)**

அ. குழந்தைகள் பராமரிப்பு, விடுதி நிர்வாகம் ஆகியவற்றில் எடுத்துக் காட்டத்தக்க அநுபவம், ஈடுபாடு இருத்தல்.

ஆ. இல்லத்தில் இருக்கும் குழந்தைகளுக்கு (வயது 6—12 வரை மதம், பண்பாடு, ஒழுக்கசீலம் போதிப்பதற்கும். கல்வி மேற்பார்வை செய்வதற்குமான அறிவுத்தகைமை இருத்தல்.

இ. 40க்கு மேற்பட்ட வயதினராகவும், தனக்கென குடும்பப் பொறுப்பு அற்றவராகவும், அல்லேல் அவற்றில் இருந்து விடுபட்டவராகவும் இருத்தல்.

**02. சமையற்காரர்**

அ. இது போன்ற வேறு இல்லங்களில் சமையல் பணியில் அனுபவம் பெற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆ. வயது 40 முதல் 50 வரை

இ. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**03. காவல் பணி பொறுப்பாளர்**

அ. இல்லத்தில் காவல் பொறுப்பை ஏற்கத்தக்க தகைமையும், திறனும், வலுவும் உடையோராயிருத்தல் வேண்டும்.

ஆ. வயது 40 — 55

**முக்கிய குறிப்பு :**

01. விண்ணப்பகாரர்கள் இதனை ஒரு ஊதியத் தொழிலாகக் கருதாமல், குழந்தைகளை ஈடுபாட்டுடன் கவனித்துப் பழகும் தன்மை அவசியமாகும்.
02. தெரிவு செய்யப்படுவோர் இல்லத்திலேயே தங்கியிருத்தல் வேண்டும்
03. சம்பளம் நேரில் பேசி முடிவு செய்யப்படும்.
04. விண்ணப்ப முடிவு திகதி 30-11-88.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-

திரு. அ. நல்லதம்பி
மானிப்பாய் வீதி,
உரும்பராய் மேற்கு.
உரும்பராய்.

[C-447]

## அரசியலை விட்டு ஒதுங்கி விடுவாராம்

கொழும்பு, நவ 7

மூன்று மாணவர் கொலைக்கு மசன் குற்றவாளியாகக்காணப்படின் நான் அரசியலையே விட்டு விடுவேன்.

சப்ரகமுவ முதலமைச்சர் பதவியைத் துறந்த திரு. காமினிபுஞ்சிநிலமே முன்கண்ட தகவலை தெரிவித்தார்.

திரு சுசந்த புஞ்சிநிலமே மூன்று மாணவர் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

## ஐவரின் சடலங்கள்

கொழும்பு நவ 7

தென் மாகாணத்தில் பொத்தல - கிம்பிஎல பாலத்தின் அருகில் ஐந்து பேரின் சடலங்களை பொலீஸார் கண்டு பிடித்தனர்

இனந்தெரியாத நபர்களினால் இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் அறிவித்தனர். (ஓ-எ)

## அடிக்கடி மின் தடை

பாஷையூர் 2 ஆம் குறுக்குத் தெருப் பகுதியில இடை இடையே ஏற்படும் மின் தடை காரணமாகவும், மின் பற்றுக் குறைவு காரணமாகவும் அந்தப் பகுதி வாழ் மீனவர்களும், பாடசாலை மாணவர்களும் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர். (இ-9)

## சிவநகரில் தேடுதல்

வட்டக்கச்சி, நவ. 07

உருத்திரபுரத்தை அடுத்துள்ள சிவநகர் பகுதிகளில் படையினர் தேடுதல் நடத்தினர்.

இத்தேடுதலின் போது இபபகுதி மககள் பலரை விசாரணைக்காகக் கிளிநொச்சி படை முகாமுக்கு படையினர் அழைத்துச் சென்றனர். (ச-ரி)

## ஸ்கந்தபுர அகதிகளுக்கு உதவி

வட்டக்கச்சி நவ. 07

ஸ்கந்தபுரத்திலிருந்து அகதிகளாகக் கிளிநெச்சி பௌத்த விகாரையில் தஞ்சம் புகுந்தவர்களுக்கு கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் இரண்டு வாரங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களை வழங்குவதற்கான உத்தரப் பத்திரங்களை வழங்கி உள்ளார்.

மீண்டும் ஸ்கந்தபுரத்துக்குச் செல்வதனால் தமக்கு தற்பொழுது வழங்கபடும் உதவி போதுமானதலல என பாதிக்கப்பட்டவர்கள் உதவி அதிபருக்குத் தெரிவித்தனர். (ச-ரி)

## 6 ஆவது தடவையாக தலைவராகத்தெரிவு

காங்கேசன்துறை, நவ. 7

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர் சபைத் தலைவராக திரு. எஸ் சிவமகாராசா ஆறாவது தடவையாக போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

ப நோ. கூ. சங்க மண்டபத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. பஞ்சலிங்கம் முன்னிலையில் இத்தலைவர் தெரிவு இடம் பெற்றது.

இயக்குநர் சபைக்கு போட்டியின்றி தெரிவான ஏனைய உறுப்பினர்கள் வருமாறு.-

திரு. க. இலங்கைநாயகம், திரு. கா. மகேந்திரன், திரு. வ யோகேஸ்வரன், திரு. மா. நாகேந்திரசீலன், திரு. ஏ. தேவ [illegible] திரு. [illegible] கு. மாணிக்கவாசகர். (இ-63)

## பிறந்ததின வாழ்த்து



### ✯ செல்வி வினோரா ✯

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பாலசுப்பிரமணியம் - உமாகாந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வி வினோரா இன்று தனது இரண்டாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரைக் கனடாவிலுள்ள அப்பா, சிறிமாமா, சித்தப்பாமார், மாமாமார், மற்றும் உறவினர்கள், நண்பர்கள் யாவரும்,

ஏழாலையிலுள்ள அம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியன்ரா, பபாஅன்ரா, ஆங்கிள், அண்ணா, செந்தில்மாமா, அன்ரா, மற்றும் மாமாமார், மாமிமார், மச்சான்மார், மைத்துனிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார். மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுவாழ வாழ்த்துகின்றார்கள். (7881)

## முருகன் மினி சினிமா

கொக்குவில்

தீபாவளி வெளியீடு

8 9 இருநாட்கள் மட்டும்

தினசரி 10 45, 2 45 காட்சிகள்

எம். ஜி. ஆர், ஜெயலலிதா

### குடியிருந்த கோயில்

எங்குமே வெளியிடப்படாத V G P. பிரதி

(7953)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.

### A/L 90

### கலை. வர்த்தகம்

| | |
|---|---|
| பொருளியல் :- | குமாரவேல் |
| வர்த்தகம் :- | தேவா |
| கணக்கியல் :- | ஸ்ரீ |
| அளவையியல் :- | சயந்தன் |
| தமிழ் : | குழந்தை |
| புவியியல் :- | குணராஜா |
| இந்து நாகரிகம்:- | அருள்நங்கை |
| அரசியல் :- | குமார் |

**ஆரம்பம்:**

12-11-88 (8 மணி)

(755)

## KEEN CENTRE

### திருநெல்வேலி

### A/L 90

### கலை, வர்த்தகம்

புதிய பிரிவு 2

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. வரதாராஜன் |
| அளவையியல் :- | திரு. S. S. மனோகரன் |
| வர்த்தகம்:- | திரு. ஜெயராமன் |
| கணக்கியல்:- | திரு. சௌந்தி |
| தமிழ்:- | திரு. குழந்தை |
| இ. நாகரிகம்:- | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| அரசியல்:- | திரு. சுந்தரமூர்த்தி |

**ஆரம்பம்:**

07. 11. 88 மாலை 4-30 p.m

[7891]

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை 1989 ஆம் ஆண்டிற்கான

# கேள்வி அறிவித்தல்

01-01-1989 ஆம் திகதி தொடக்கம் 31-12-1989 ஆம் திகதி வரைக்கான காலப் பகுதிக்குக் கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் குத்தகைகள் சார்பிலு கேள்விகள் 28-11-1988 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் வலி வடக்கு பிரதேசசபையின அந்தந்த உப அலுவலகங்களில் 25-11-1988 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை கீழ் குறிப்பிடும் அட்டவணைப் பிரகாரம் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும் படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் ''விசேட ஆணையாளர் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதற்கென இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும இவ்வலுவலகத்தில் அல்லது உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### அட்டவணை

| குத்தகை விபரம் | ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| **காங்கேசன்துறை உப அலுவலகம்** | ரூ. ச | ரூ. ச | ரூ. ச |
| (1) மீன் மரக்கறிச் சந்தை | 20000, 00 | 250, 00 | 50, 00 |
| (2) மாட்டிறைச்சிக் கடை காங்கேசன்துறை | 25000, 00 | 250, 00 | 50, 00 |
| (3) மாட்டிறைச்சிக் கடை மயிலிட்டி | 8000, 00 | 100, 00 | 25, 00 |
| **மயிலிட்டி உப அலுவலகம்** | | | |
| (1) வீமன்காமம் மீன் மரக்கறிச் சந்தை | 25000, 00 | 250. 00 | 50. 00 |
| (2) பலாலிச் சந்தை | 16000, 00 | 250, 00 | 50. 00 |
| (3) வீமன்காமம் ஆட்டிறைச்சிக் கடை | 6500. 00 | 100 00 | 25, 00 |
| (4) பலாலி மாட்டிறைச்சிக் கடை | 5000. 00 | 100, 00 | 25. 00 |
| (5) கட்டுவன் தெற்கு மாட்டு இறைச்சிக் கடை | 5000, 00 | 100, 00 | 25, 00 |
| **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | | |
| (1) கூத்தன் சீமா சந்தை | 425, 00 | 50, 00 | 25, 00 |
| (2) குலமங்கால் மாட்டு இறைச்சிக் கடை | 8000, 00 | 100, 00 | 25, 00 |
| (3) தெல்லிப்பளை கட்டுவன் வீதி மாட்டு இறைச்சிக்கடை | 4000, 00 | 100, 00 | 25, 00 |
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | |
| (1) மல்லாகம் சந்தை | 20000, 00 | 250. 00 | 50, 00 |
| (2) அளவெட்டி சந்தை | 7000. 00 | 100 00 | 25 00 |
| (3) ஆட்டிறைச்சிக் கடை மல்லாகம் | 12000, 00 | 100, 00 | 25, 00 |

பொன்னம்பலம் பாலசிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை.

வலிகாமம் வடக்குப் பிரதேசசபைப் பணிமனை,
காங்கேசன்துறை. 04-11-1988

(C-763)


# சிங்கர்

## விவசாய நீரிறைக்கும் இயந்திரம்
## சேனை, வயல், இரத்தினக் கற் குழிகளுக்கு முற்றிலும் உகந்தது

அதிக செயலாற்றல்
மணிக்கு 8250 கலன் இறைக்க வல்லது
செலவுச் சிக்கனம்
குறைந்தளவு எரிபொருளில் அதிக சேவை.
நீடித்த பாவனை
நவீன சிங்கர் தொழில்நுட்ப உற்பத்தி என்பதால் அதிக காலம் உழைக்கும். பெற்ரோல் அல்லது மண்ணெண்ணெய்யில் இயங்கும் 4 குதிரைச் சக்தி கொண்ட உலகப்புகழ்வாய்ந்த ஹொண்டா ஜீ. கே. என்ஜின் பொருந்தியது.
இரண்டு வடிவ அமைப்புகள் உள்ளன.
- எஸ். பி. 50 (மார்க் 2) விலை. ரூ: 11, 390/-
- என் எஸ். பி. 50 விலை: ரூ. 11,290/-

உதிரிப் பாகங்கள் நாடெங்குமுள்ள சிங்கர் கடைகளில் தாராளமாகக் கிடைக்கும்



விவசாயப் பிரிவு
சிங்கர்*
மாசற்ற மேன்மை

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.

Minds/SA/8


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி விசுவலிங்கம் மகேஸ்வரி

மலர்வு:- 09-09 1964 — உதிர்வு - 20-10-1987

நீங்கள் இறைவனடி சேர்ந்து ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் போனாலும் எம் துயரம் எம்மை விட்டகலாது அன்பிற்கும் பண்பிற்கும் வாழ்விற்கும் வழிகாட்டியாய் இருந்து உற்றார் உறவினர் உள்ளத்தில் நிலையாய் இடம் பிடித்து விட்டீர்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்கள் பிரிவால வாடுகின்றோம்.

விக்ரம் ஸ்ரோர்ஸ், வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

அன்புக் கணவர், குடும்பத்தினரும்.

[7855]

## ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர்

திரு கதிரவேலு மாணிக்கம் தம்பையா

(இளைப்பாறிய ஆசிரியர்)

மலர்வு: 10 4 1903 — உதிர்வு: 20 10. 1987

தாயினும் சாலப்பரிந்து எம்மை வளர்த்து ஆளாக்கிய எங்கள் அன்புத் தெய்வத்திற்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தி பிரார்த்திக்கும்:

பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

Kopay Road, URUMPIRAY.

(7877)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி

தங்கமுத்து கனகரத்தினம்

தோற்றம்: 06- 02- 1926 — மறைவு: 20- 10- 1987

திதி: 07- 11- 1988

நீங்கள் இறைவனடி சேர்ந்து ஓராண்டு கழிந்து விட்டன ஆனால் உங்கள் நினைவு எம்மனதை விட்டகலவில்லை அன்பிற்கும் பண்பிற்கும் இறைதொண்டிற்கும் வழிகாட்டியாய் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்!

அன்புக் கணவன் கனகரத்தினம்,

- பிள்ளைகள்,

மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

ஸ்ரேசன் ரோட், பளை

(7873)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 22 12- 1971

உதிர்வு: 20- 10- 1987

செல்வி கதிரவேலு ரோஸ்யா

என் அருமைக் கண்ணே குட்டி! கடவுளே தஞ்சமென ஆலயத்தை நாடினோம் யமன் வந்து நின் உயிரைப் பறித்தானே ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் எம் நெஞ்சம் ஆறாதம்மா! நீயாளாகி எம்மை ஆற்றுவாய் என்றெல்லாம் கனவு கண்டோம். எல்லாம் ஒழிந்ததம்மா! நெஞ்சமும் ஆறுதம்மா! உன் சிரிப்பையும் துடிப்பையும் இனி என்றுதான் காண்போம்.

உன் ஆத்ம சாந்திக்கு எமது கண்ணீர் அஞ்சலி!

தாயார், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

"தவகிரி" கோப்பாய் தெற்கு. கோப்பாய்.

(7951)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர்

வைத்திலிங்கம் நவரட்ணம்

B Com (Hons)

(Retired. Teacher Of Manipay Hindu College)

மலர்வு: 23. 7. 1925 — அகால உதிர்வு: 20. 10. 1987

"எமக்காக உடல் பொருள் ஆவி ஈந்த அப்பாவுக்கு"

கண்ணீர் அஞ்சலி செலுத்தி பிரார்த்திக்கும்!

மனைவி: திருமதி ஞானசக்தி நவரட்ணம்

மக்கள்: ஞானா தனஸ்கந்தா, அரவிந்தன்

மருமகன்: திரு. தனஸ்கந்தா.

மற்றும் உறவினர், நண்பர்கள்

Mathura, Manipay Road, Urumpirai

(7878)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ப. கிருபாகரன் (சத்தியன்)

தாயின் மடியில்:- 10. 2. 1969 — தாயக மண்ணில் 7. 11. 1985

சரித்திரம் படைத்திட்ட
சத்தியனே-
அன்று எம்மினத்தின் விடிவிற்காய்
போராடினாய்
ஆனால்-
விடிவிற்கு முன்னமே விடிவெள்ளியானாய்
நிச்சயம் நீ கல்லறைக்குச் செல்லமாட்டாய்
கருவறைக்கு அழைக்கப்படுவாய்
ஒரு நாள்
எங்கள் மத்தியில் பிறப்பாய்
அப்போது உன்னை நாம்
அடையாளம் கண்டு கொள்வோம்.

அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், நண்பர்கள்.

குமரபுரம் பரந்தன்.

(7897)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 16.4.1922 — அழிப்பு: 21.10.1987

திதி: சதுர்த்தசி 8.11.88

முருகேசு துரைசிங்கம்

(மதன் றவல்ஸ் உரிமையாளர் (இருபாலை)

அன்பின் திருவுருவே அணையாத பேரொளியே பண்பின் உறைவிடமே வாழ்வில் ஒளி விளக்கேற்றி வைத்த தெய்வமே! எங்கள் நல்வாழ்விற்கு வழிகாட்டியாய் நின்று எம்மால் மறக்கமுடியாதவாறு உங்கள் அன்பால் ஆட்கொண்ட அன்புத் தந்தையே! உங்கள் திடீர் மறைவை எண்ணித் தினம் தினம் உருகி வெடிக்கின்றோம் ஐயா என்று சொல்ல அருகதை அற்றவர்களாகி விட்டோம். ஆண்டு ஒன்று ஆனதென்று எம் நினைவுகள் கூறினாலும் ஆறாத மனப்புண்ணாய் அமைந்த அச்சம்பவம் நீறாகிப் போக வலலை நினைவினிலே நிற்குதையா! உங்களைப் பிரிந்து தனிமையில் வாடுகின்றோம். தவிக்கிறோம். எங்கள் மனத்துயரை யாரிடம் எவ்வாறு எடுத்துரைப்போம் ஐயா! பண்பின் உயர்விடமே பாசத்தின் உறைவிடமே! உங்கள் நினைவுடனே எங்கள் வாழ்நாட்கள் என்றும் நீடித்தே நிலைத்து நிற்கும்.

தங்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால வாடும் அன்பு:

மனைவி மக்கள சகோதர சகோதரிகள். உற்றார், உறவினர்கள்.

V. H. லேன், இருபாலை, கோப்பாய்.

(7519)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி இரத்தினலீலா நடராசா

மலர்வு: 6 - 9 - 1948 — உதிர்வு: 20 - 10 1987

திதி: 7 - 11 - 1988

அம்மா! எம்மை விட்டு உடலால்
பிரிந்தாலும் எம் உள்ளத்தில் குடியிருக்கும்
அன்புத்தெய்வமே! மறுபிறவி உண்டானால்
எப்பிறப்பிலும் நாம் ஒன்றிணைய
வேண்டுமெனத் துடிக்கும்

உம் அன்புக் கணவன் பிள்ளைகள், பெற்றோர், சகோதரர், சகோதரிகள்.

11/5, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(7657)

## நினைவு கூருகிறோம்



பிறப்பு 16 - 08 - 1912

மறைவு:- 21 - 10 - 1987

V. S. நடராஜா (கண்ணாடி அப்பா)

எங்குற்றனையோ! ஏதாயிற்றோ! ஆண்டொன்றாயினும் கேட்டதில்லை. மகளின் சைக்கிளில் மனங் கொண்டேறி மாவடித் தெருவால் ஓடினை என்றார். அதன்பின் கண்டிலோம் அப்பா! என்று வருவாய் எல்லோரும் ஆவல், காண வேண்டும், கதைக்கவேண்டும், விசாரிக்கவேண்டும், சேதி எப்படி? விசனமாக இருக்கிறதே! ஆண்டொன்றும் ஆயிற்றே! தங்களிதிப்படி என்றுமில்லையே? தவிக்கும்- மனைவி, மக்கள், மருமகர், பேரர், பலரும்- தகவல் கிடையா யாவரும் கூடி விங்கத்தருகே இருந்தேங்கி, இளைக்கின்றோமே, இன்னும் தாமதம் ஏனோ- அப்பா? சின்னஞ் சிறார்க்கொரு மறுமொழி கூறிச் சாந்தி செய்ய யாருமே இல்லை. இங்கே நிலைமை என்னென்றுரைப்பது யார்தான் கூறுவர்! இறைவன் தானே! அறிவன் எல்லாம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பழைய வீதி, கோப்பாய் தெற்கு.

மனைவி மக்கள் மருகர் பேரப்பிள்ளைகள்.

(7952)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 30- 06 1923

மறைவு: 20-10-1987

திதி: 07- 11- 1988

திரு. குழந்தைவேலு நமசிவாயம்

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மகள் மருமகன், உடன்பிறப்புக்கள்

சண்ணகை அம்மன் கோவிலடி வட்டு - மேறகு, வட்டுக்கோட்டை.

(7700)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வருணன் வரதராஜா

மலர்வு: 28 - 02 - 1985 — உதிர்வு: 20 - 10 - 1987

திதி: 7 — 11 — 1988

அன்புக் குஞ்சு வருணா
உன் மறைவால் நிதமும் கலங்கும்

அப்பா, அம்மா, அக்கா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, சித்தப்பா, சித்திமார், பெரியம்மாமார், மாமா, மாமி, உற்றார், உறவினர்.

திரு. திருமதி வரதராஜா, (இலங்கை வங்கி யாழ்ப்பாணம்) 11/5, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(7658)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

பழைமை எனப்படுவது யாதெனின் யாதும் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

**பொருள்:**

பழைமை என்று சொல்லப்படுவது என்று வினவினால் அது பழகியவர் உரிமை பற்றிச் செய்யும் செயலைக் கீழ்ப்படுத்தாமல் ஏற்கும் நட்பாகும்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல. 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073
07-11 1988 த. பெ இல 23

## புதிய தொல்லை

தமிழர்களுக்கு என்ன கெட்டகாலம் வந்தது? எல்லா வகைகளாலும் அவர்களுக்குக் கஷ்டங்கள், துன்பங்கள், மரணங்கள், அழிவுகள் வந்து சேர்கின்றனவே!

அரசியல் சுதந்திரம் அவர்களுக்கு இல்லை. கிடைக்க வேண்டிய உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அரசியல் சுதந்திரம், உரிமைகள் இல்லாத நிலையில் பொருளாதார வளர்ச்சி அருகி விட்டது.

அரசியலிலும், பொருளாதாரத் துறையிலும் ஏற்பட்ட நலிவு நிலைகளின் விளைவாக கல்வி, சமூகம், கலாசாரம் உட்படப் பல துறைகளும் பாதிப்பு அடைந்துள்ளன.

இவை போதாது என்று சுகாதாரப் பிரச்சினைகளும் தமிழர் சமுதாயத்தைத் தொல்லைப்படுத்தத் தொடங்கி உள்ளன.

யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் அண்மையில் நடந்த சுகாதாரக் கருத்தரங்கில் மிகச் சமீப காலத்தில் தமிழ்ப் பகுதியை பயமுறுத்தி வரும் ஆபத்தான மூன்று நோய்கள் குறித்து வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளார்கள்.

போதைப் பொருள் விளைவு, எயிட்ஸ் ஆகிய இரண்டு பேராபத்தான நோய்களுடன் ''மஞ்சள் காமாலை - பீ'' என்ற நோயும் பரவி வருவதாகவும், அதன் ஆபத்துக் குறித்தும் பிரஸ்தாப கருத்தரங்கில் நிபுணர்கள் எச்சரித்துள்ளார்கள்.

மூன்றும், ஒன்றுக்கு மற்றது சளைத்தது அல்ல என்ற ரீதியில் மரணத்தை உண்டு பண்ணக் கூடியவை. இலகுவில் மக்கள் மத்தியில் பரவக் கூடியவை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த ஆபத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு, தடுப்பு முறைகளைக் கையாள வேண்டும். அதற்கான சுகாதாரக் கல்வி சரிவர மக்களுக்குப் போதிக்கப்பட வேண்டும். இவ்வாறு வைத்திய நிபுணர்கள் கருத்தரங்கில் வலியுறுத்தி உள்ளார்கள்.

சுகாதாரக் கல்வி, போதனை, பிரசாரம் என்பன ஒழுங்காகவும் சீராகவும் நடக்க, நோய்த் தடுப்புப் பகுதியினருக்கும், வைத்தியப் பிரிவினருக்கும் இடையில் பரஸ்பர ஒத்துழைப்பு அவசியம் எனவும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

இவை மட்டும் போதா. மூன்று நோய்களின் ஆபத்தையும் மக்கள் உரிய முறையில் புரிந்துகொண்டு, தடுப்பு வழிகளைக் கையாள்வதன்மூலமே மரணங்களைத் தடுக்கலாம். சுகாதாரத் தொல்லைகளை நீக்கலாம்.

# தமிழ்நாடு தேர்தலில் யாருடன் கூட்டு?

# தீர்மானிக்க மூப்பனாருக்கு முழு அதிகாரம்!

சென்னை, நவ. 6

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சியுடன் தேர்தல் கூட்டு அமைப்பது?

இதுபற்றி முடிவு எடுக்கும் முழு அதிகாரமும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி. கருப்பையா மூப்பனாருக்கு புதுடில்லி வழங்கிவிட்டது.

புதுடில்லி சென்று இந்திரா காங்கிரஸ் தலைமைப்பீடத்துடன் பேச்சுக்கள் நடத்திவிட்டு சென்னை திரும்பினார் திரு மூப்பனார்.

திரு மூப்பனார், அ.தி.மு.க ஜானகி அணியுடனும் ஜெயலலிதா அணியுடனும் கூட்டு வைப்பதை விரும்பவில்லை என்றும்,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நாவலர் நெடுஞ்செழியனின் நால்வர் அணியின் உறவுடன் தனித்தே இந்திரா காங்கிரஸ் தேர்தல் களத்துக்குச் செல்வதையே விரும்புகிறார் என்றும் சென்னை அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. நால்வர் அணி சார்பாக திருநாவுக்கரசு, மூப்பனாரை நான்கு - ஐந்து தடவை சந்தித்துப் பேசி விட்டார்.

'மூப்பனார் என்ன நினைக்கிறார் என்று தெரிந்து கொள்வதே மிகுந்த சிரமம்'' — என்று திருநாவுக்கரசு சந்திப்பின் பின்னர் சொன்னார். (-எ)

## நாளை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

## டுகாகிஸுக்கு ஆதரவு கூடுகிறதாம்!

வாஷிங்டன், நவ 7

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான திரு. மைக்கல் டுகாகிஸுக்கு ஆதரவு பெருகி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

கலிபோர்னியா, மிச்சிகன் மாநிலங்களில் குடியரசு வேட்பாளரை விட டுகாகிஸ் முன்னணியில் இருப்பதாக கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

ஜனாதிபதி தேர்தல் முடிவில் 'கடைசி நேர அதிர்ச்சி'யைக் கொடுக்க வேண்டும் என்ற விதத்தில் இறுதிக்கட்ட பிரசார வேலைகளில் ஜனநாயகக் கட்சி தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை —

அதிபர் றேகன் குடியரசு வேட்பாளருக்கு ஆதரவு கேட்டு நேரடியாக தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேசி வருகிறார்.

குடியரசுக் கட்சிக்கு ஆதரவு குறைந்த மாநிலங்களாகக் கருதப்படும் மிச்சிகன் டெக்ஸாஸ் ஆகியவற்றில் நடந்த கூட்டங்களில் அதிபர் றேகன் பேசினார்.

'புஷ்ஷுக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் 'றேகன் புரட்சி'க்கு அளிக்கப்படும் வாக்காகவே கருதப்படும்—

இப்படி அதிபர் றேகன் அக்கூட்டங்களில் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நாளை 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

இதனிடையில் வெற்றிக்கான வாய்ப்பு இன்னும் இருக்கிறது என்று ஜனநாயகக் கட்சி வேட்பாளர் திரு மைக்கல் டுகாகிஸ் தெரிவித்தார்.

கலிபோர்னியாவில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் டுகாகிஸ் பேசினார்

லட்சக்கணக்கான வாக்காளர்கள் இன்னும் யாரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வது என்பது குறித்து தீர்மானம் எடுக்காதவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் வாக்கு களைப் பெற நான் முயற்சிப்பேன்

இப்படி திரு. டுகாகிஸ் சொன்னார். (எ)

### புஷ்ஷுக்கு ஆதரவாக றேகனும் தேர்தல் களத்தில் இறங்கினார்

### குண்டு வெடிப்பில் 17 பேர் பலி!

புதுடில்லி, நவ. 6

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற வெவ்வேறான மூன்று குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 17 பேர் உயிரிழந்தனர்; 60க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இவர்களில் 11 பேர் பஞ்சாப் மாநில எல்லையை ஒட்டியுள்ள கிராமம் ஒன்றில் ஜம்மு-காஷ்மீர் அரசுக்குச் சொந்தமான பஸ் ஒன்றில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் இறந்தனர்.

குர்தாஷ்பூர் மாவட்டத்தில் கடான்கோட் நகரில் ஏற்பட்ட இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 6 பேர் உயிரிழந்தனர் 5 பேர் படுகாயமடைந்தனர். (ஒ-எ)

## பிரான்ஸில் 'எய்ட்ஸ் தீவிரமாக பரவுகிறது

பாரிஸ் நவ 6

எய்ட்ஸ் நோய்க்கு எதிராக தீவிரத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரெஞ்சு அரசு தீர்மானித்துள்ளது

அதி்வோ... எய்ட்ஸ் நோய் பாரிஸில் பரவி வருவதாக ஆய்வு ஒன்றில் தெரியவந்திருக்கிறது

இதைத் தடுக்கத் தவறிவிட்டால் பிரெஞ்சின் வீதிகளில் ஆண்டுதோறும் இடம்பெறும் வாகன விபத்துகளில் இறப்போரின் எண்ணிக்கையை எய்ட்ஸ் நோயினால் இறப்போரின் எண்ணிக்கை 1991 ஆம் ஆண்டில் மிஞ்சிவிடும் என்று பிரெஞ்சு சுகாதார அமைச்சர் அறிவித்தார்.

பிரெஞ்சு நாட்டில் ஆண்டுதோறும் குறைந்தது பத்தாயிரம் பேர் சாலை விபத்துக்களில் உயிரிழக்கின்றனர். (எ)

## என் சொத்து முழுவதையும் ஏழைகளுக்கு கொடுப்பேன்

### இப்படிச் சொல்கிறார் ஜானகி

சென்னை, நவ 6

என் சொத்துக்கள் முழுவதையும் ஏழைகளுக்கு கொடுப்பேன் இது சம்பந்தமான இறுதி உயில் ஒன்றை விரைவில் வெளியிடுவேன்.

அ. தி. மு. க, ''ஜா'' அணி தலைவியான ஜானகி அம்மாள் முன் கண்டவாறு தெரிவித்தார்.

கோபிச் செட்டிப் பாளையத்தில் நடந்த கூட்டத்தில் ஜானகி அம்மாள் பேசினார்.

மறைந்த எம். ஜி. ஆர் எனக்கும் சில சொத்துக்களை விட்டுச் சென்றிருக்கிறார் அச் சொத்துக்களை நான் ஏழைகளுக்கே கொடுப்பேன் ஆட்சியைப் பிடிக்க எனக்கு ஆசையில்லை.

ஆனால் எம் ஜி ஆர் ஆரம்பித்த வளர்ச்சிப் பணிகளைச் செய்து முடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் தான் நான் தேர்தலில் ஈடுபடவேண்டியுள்ளது.

இப்படி ஜானகி அம்மாள் சொன்னார். (ஒ-எ)

**வெளி உலகில்**

## போலந்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சி!

போலந்து நாட்டின் அரசியல், தொழிற் சங்கப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சுதந்திர தொழிற் சங்கத் தலைவர் வால்சே நிபந்தனை விதித்திருக்கிறார்.

★ மூடப்பட்ட கடான்ஸ்க் துறைமுக வேலைத்தளம் மீண்டும் திறக்கப்பட வேண்டும்!

★ வேலை நிறுத்தத்தின்போது பதவி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட வேண்டும்

இவையே அவர் விதித்த நிபந்தனைகள்.

சுதந்திர தொழிற் சங்க சம்மேளனத்தை உருவாக்கியவர் திரு. வால்சே உருவான இடம் கடான்ஸ்க் துறைமுகவேலைத்தளம்.

அந்த வேலைத்தளத்தை போலந்து அரசு திடீர் என்று மூடியதை திரு. வால்சே தொழிற் சங்கத்துறைக்கு ஏற்பட்ட பலத்த அடி என்றே கருதுகிறார்.

ஆனால் மூடப்பட்ட வேலைத்தளத்தை போலந்து அரசு மீண்டும் திறக்க மாட்டாது என்றே வார்ஸோவில் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமரே வேலைத்தளத்தை மூடுவது என்ற முடிவை எடுத்தார் என்று பி பி சி. தெரிவித்தது (எ)

## அப்பா ஓடத் தொடங்க அவர் மீது சூடு விழுந்தது

### 8 வயது மகள் சாட்சியம்

நானும் எனது அப்பாவும் கோயிலுக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இருவர் எமது காரை மறித்தனர்—அப்பாவிடம் அண்ணை ஒரு கதை என்று ஒருவர் சொல்ல அப்பா காரை விட்டு இறங்கினார். காரை விட்டு இறங்கிய அப்பா திடீரென ஓடத் தொடங்கினார். அப்போது அவர் மீது இருவரும் துவக்கினால் சுட்டார்கள்.

வெள்ளிக்கிழமையன்று மாலை சுடப்பட்டு மரணமான கதனபால சிங்கத்தின் மரண விசாரணையில் சாட்சியமளித்த இறந்தவரின் மகள் கௌசலா (வயது 8) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவரது மரண விசாரணை யாழ் வைத்திய சாலை பொலீஸ் பகுதியில் நடைபெற்றது.

பிரேத பரிசோதனை மரணவிசாரணை என்பவற்றின் பின் இவரது சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-9)

## துணைவேந்தர் நல நிதியம்

யாழ்ப்பாணம் நவ 7

யாழ். பல்கலைக்கழகம், துணைவேந்தர் நல நிதியம் என்ற பெயரில் ஒரு நிதியத்தை ஆரம்பித்திருக்கிறது.

மஹாபொல புலமைப் பரிசில், கல்வி உதவிப் பணம் ஆகியவற்றைப் பெறாத மாணவர்களுக்கும், எதிர்பாராத சூழ்நிலை காரணமாக கஷ்டப்படும் மாணவர்களுக்கும் உடனடி நிவாரணம் வழங்கும் விதமாகவே இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது.

இந்த நிதியத்துக்கு நன்கொடைகள் வரவேற்கப்படுவதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-ஒ-ஐ)

## குடியுரிமை வழங்கும் சட்டமூலம் 9 ஆம் திகதி நாடாளுமன்றம் வருகிறது

கொழும்பு, நவ 7

நாடற்றவர்கள் அனைவருக்கும் இலங்கைக் குடியுரிமை வழங்குவதற்கு வகைசெய்யும் சட்டமூலம் இம்மாதம் 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

கடந்தவாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இச்சட்டமூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனிடையில் நுவரெலியாவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் தொண்டமான்—

''இம்மாதம் 9 அல்லது 11 ஆம் திகதி இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் நாடற்றவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள்'' என்று சொன்னார்

அதேவேளை ஏழு அரசியல் கட்சிகளின் கூட்டணியும், மலையகத்தவர் அனைவருக்கும் இலங்கைக் குடியுரிமை வழங்க முடிவு செய்திருப்பதாக அறிவித்துள்ளது

92 ஆயிரம் குடும்பங்களுக்கு மந்திரமன்றி இந்தியா திரும்புவதற்காக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தவர்களுக்கும் இலங்கைக் குடியுரிமையை வழங்க இந்த ஏழு கட்சி கூட்டணியிலுள்ள தலைவர்களுக்கு இடையே இணக்கம் ஏற்பட்டுள்ளதாம் (எ)

### சாரணியம்

## மொழி, மதம், சாதி வேறுபாட்டுக்கு அப்பாற்பட்டது

கொடிகாமம் நவ 7

சாரணியம் மொழி, மதம், சாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது உலகத்திலுள்ள 118 நாடுகளில மூன்று கோடி சாரணர்கள் வேறுபட்ட மொழி, மதம், சாதியைச் சேர்ந்தவர்கள் அவர்கள் சாரணர் என்ற அடிப்படையில் சகோதரத்துவமான முறையில் சகோதரமாகச் செயல்படுகின்றனர்'

பளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சாரணர் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றும் பொழுது வண. பிதா ச. போ. பிரான்சிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

வண. பிதா பிரான்சிஸ் சாரணிய குழுவுக்குப் பரிசில்களை வழங்கினார்.

சாரணிய ஆசிரியை திருமதி அருந்தவபாலன் நன்றியுரை வழங்கினார். (ச-75)

### சந்திரசேகரம் நினைவு விழா

அச்சுவேலி, நவ. 7

அமரர் பேராசிரியர் ப. சந்திரசேகரத்தின் முதலாவது ஆண்டு நினைவு விழா 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக கல்வியியற்புல தலைவர் பேராசிரியர் வி ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் நினைவு விழாவில் பேராசிரியர் சந்திரசேகரத்தின் நினைவாக கலாநிதி சபா ஜெயராசா எழுதிய 'இலங்கையில சுதந்திரத்திற்கு பிந்திய கல்வி வளர்ச்சி' என்ற நூல் வெளியிடப்படவுள்ளது.

நினைவு நூல் வெளியீட்டு உரையை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு கே சின்னத்தம்பி ஆற்றுவார்.

கல்வியியற்புல மாணவர் கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ள நினைவு விழாவில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கல்விமான்கள் பலர் உரையாற்றுவர். (இ-11)

## மாணவர் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடின் கடும் நடவடிக்கையாம்

தென்னிலங்கையில் பாடசாலை மாணவர்கள் மீண்டும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடின் அவர்கள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும்.

நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக கடந்த நான்கு வாரங்களாக சில பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தன

மீண்டும் கடந்த 4 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்பட்ட பேதிலும் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்களில் ஈடுபடக் கூடாது எனவும்—

அதனை மீறுபவர்கள் மீது மீண்டும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ-3-10)

### கட்டப்பட உள்ள 25 வீடுகளில்

## 14 வீடுகள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு

யாழ்ப்பாணம், நவ. 7

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் குழுவினால் முதற்கட்டமாக அமைக்கப்படவுள்ள 25 வீடுகளில் 11 வீடுகள் இந்தியாவில் இருந்து திரும்பியவர்களுக்கும், 14 வீடுகள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கும் அமைக்கப்படவுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது

இந்தக் கூட்டத்தில் மேலதிக உதவி அரசாங்க அதிபர் திரு இராமநாதன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ் மாவட்ட முகாமையாளர், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த 25 வீடுகளும் பருத்தித்துறை, கரவெட்டி, சங்கானை, நல்லூர், தெல்லிப்பழை, கோப்பாய், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சண்டிலிப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமைக்கப்படவுள்ளன.

இந்த வீடுகளை அமைப்பதற்கான கட்டடப் பொருள்களை விநியோகம் செய்வதற்கு ஐந்து பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வீடுகளை அமைப்பதற்கான நிதியை அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் வழங்கும்

அமைப்பு மேற்பார்வையை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை செய்யும் (இ-5)

### கிராமோதய சபைத்தலைவர்

மாங்குளம், நவ 7

மாங்குளம் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் திரு. முருகேசு ஜெயவீரசிங்கம் மாங்குளம் கிராமோதய சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ச-94)

**சமய சந்நிதிகளில்**

### பாலசுப்பிரமணிய கோயில் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், நவ 7

பன்னாலை பாலசுப்பிரமணியசுவாமி கோயில் கொடியேற்ற வைபவம் இன்று 7 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறும்

15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் 16 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும்

இம்மாதம் 8 ஆம் திகதி புதன்கிழமை திருக்கார்த்திகைத் திருவிழாவும் அன்று பகல் 12 மணிக்கு சங்காபிஷேகமும் நடைபெறும். (ச)

## கடன் பெறும் எண்ணத்தை கைவிடும் ஊழியர்கள்!

யாழ்ப்பாணம், நவ 7

அரச ஊழியர்களுக்கான இரண்டு வருடச் சம்பள முற்பணக் கடனுக்காக யாழ் கல்வித் திணைக்களத்தில் இதுவரை 700 க்கு மேற்பட்ட விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஆனால் இது வரை ஒரு சில பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களே திணைக்களத்துக்கு மீள வந்து சேர்ந்துள்ளனவாம்.

இந்தக் கடன் வழங்குவதற்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் கடுமையாக இருப்பதனாலும்—

பிணையாளர்களாகக் கையெழுத்திடுபவர்கள் பல விதிமுறைகளுக்கு உட்பட வேண்டி இருப்பதாலும் இக்கடனைப் பெற வழியின்றி அரச ஊழியர்கள் கஷ்டப்படுகின்றனர்.

இதனால் கடன் பெறுவதற்கான விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளும் ஊழியர்கள் அவற்றை நிரப்பிக் கொடுக்க முன்வாராதுடன் கடன் பெறும் எண்ணத்தையே கைவிட்டுவிடுகின்றார்கள் (உ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரழிவுக்கு பாகற்காய் குளிசைகள்
(குடிநீர்ச்சரக்குகள்)
இரத்தத்தை சுத்திகரிக்க
வல்லாரைப்பில்ஸ்
ஈரல் வியாதிக்கு
நகுறல் பிற்றவக்க பிளஸ்
குளிசைகள்
கிடைக்கும் இடம்
க.செ. கைலாசம்பிள்ளைஅன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

உதயன்

07 - 11 - 1988 திங்கட்கிழமை

சக்தி, பலம், வலிமை
தேக ஆரோக்கியத்துக்கு
கலிபோர்னியாவில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட
★ பாதாம் பருப்பு
★ ஸ்பெயின் குங்குமப்பூ
★ கஸ்மீர் குங்குமப்பூ
★ சுத்தமான பசுநெய்
★ சுத்தமான தேன்
கிடைக்கும் இடம்
க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# நாடற்றோருக்கு குடியுரிமை; நாடாளுமன்றத்தில் புதனன்று சட்டமூலம்

## அன்றைய தினம் ஹர்த்தாலுக்கு ஜே. வி. பி. அழைப்பு

கொழும்பு நவ: 7

நாடற்ற அனைவருக்கும் குடியுரிமை வழங்கும் சட்டமூலம் எதிர்வரும் புதன்கிழமை நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த ஆண்டு முடிவுக்குள் நாடற்ற மலையக மக்கள் அனைவருக்கும் இலங்கைக் குடியுரிமை வழங்க இச்சட்டம் வழிவகுக்கிறது

இதனிடையில் இச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தினத்தன்று ஹர்த்தால் நடத்தும்படி ஜே. வி. பி. அழைப்பு விட்டிருக்கிறது.

''அவசரம்'' என்ற முத்திரையுடன் இச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இது நிறைவேற்றப்படும் என்றே தான் நம்புவதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

''மக்கள்விடுதலை முன்னணி சட்டமூலத்தை எதிர்ப்பதுடன், சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் தினத்தில் ஹர்த்தால் நடத்தும்படி அழைப்பு விட்டிருக்கிறதே'' என்று சுட்டிக் காட்டிய தற்கு அமைச்சர் தொண்டமான்—

'அது நல்லது. அவர்கள் அப்படிச் செய்வது, இச்சட்ட மூலத்தை அவர்கள் பாரதூரமாக எடுத்துள்ளார்கள் என்பதையே காட்டுகிறது'' என்று சொன்னார். (உ எ)

## ஓராண்டு நினைவு தினம்

தனபாலசிங்கம் - புஷ்பராணி தம்பதிகளின் ஏகபுத்திரி செல்வி சாந்தி அவர்களின் ஓராண்டு நினைவு தினம்



### செல்வி சாந்தி

உதயம்: 28 - 10 - 1977
உதிர்வு: 07 - 11 - 1987

அகமகிழ்ந்து உன்னை ஆக்கி வைத்தோம்
அரிவை யென உன்னை அரவணைத்தோம்
அழிப்பவர்கள் அரை நொடியில்
அழித்துவிட்டார்
அவனியிலே உன்னை இனி என்று காண்போம்
ஓராண்டு நினைவு நாளில் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கும்!

அப்பா, அம்மா, தம்பி நிசாந்தன்,
உறவினரும், சுற்றத்தாரும்.

(7807)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
கந்தர் - சின்னத்தம்பி (சிமோல்)
அவர்கள்
ஆண்டவன் படைப்பு - 12. 5. 1929
அழிப்பு - 20. 10. 1987
சிரார்த்த திதி: 7. 11. 1988

எம் குல ஒளி விளக்கே! எமதன்பு ஆருயிரே! காலன் உமைக்கண்டு காலம் ஓராண்டு ஆனபோதும் நாளும் உமை நினைத்து நாம் படும் துயரோ கோடி ஐயா! ஆரெமக்கு துணை என்று அறிவித்து சென்றீர் அன்பே உம் பிரிவினாலே அனுதினமும் துயரமய்யா. உமது ஆத்மா பூரண சாந்தி அடையட்டும்.

உமது பிரிவால் துயருறும்!
பனைவி யோகேஸ்வரி பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

116, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.

(7454)

# தேர்தல் அதிகாரிகள் இன்னும் தெரிவாகவில்லை

கொழும்பு, நவ.7

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இன்னும்தேர்தல் அதிகாரிகளை எவரையும் அரசாங்கம் தெரிவு செய்யவில்லை என்று 'சண்டே டைம்ஸ்'செய்தி வெளியிட்டிருக்கிறது.

எனினும் தேர்தல் கடமைகள்பற்றி சிரேஷ்ட அரசு அதிகாரிகளுக்கான பயிற்சி வகுப்புகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

இவர்கள் பின்னர் 20 ஆயிரத்துக்கும் அதிகமான அரசு ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் கிழக்கு மாகாணத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை அரசு அலுவலகங்களை மீண்டும் இயங்கச் செய்யவேண்டும் என்றும்—

அதற்குப் போதிய அவகாசம் இல்லை என்றும் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்ததாக சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டது.

தற்போதைய நிலையில் அம்பாறைக் கச்சேரி ஒன்று மட்டுமே இயங்குகின்றது (உ-எ)

## சுட்டுக்கொலை

புங்குடுதீவு, நவ' 7

புங்குடுதீவில் கடந்த வெள்ளிக்கிழமை மூன்று கடற்றொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

புங்குடுதீவு கிழக்கு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லக்கண்டு, சின்னச்சிங்கன், திரு. வின்சன் ஆகிய மூவருமே சுட்டுக் கொலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ131)

## ஹாட்லி முன்னணியில்

சரவெட்டி, நவ 7

அண்மையில் வெளிவந்த ஜீ. சி. ஈ. (சாதாரண) தர விசேட பரீட்சை முடிவுகளின்படி யாழ் மாவட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்றிருக்கின்றனர்

இந்தக் கல்லூரியைச் சேர்ந்த பதினைந்து மாணவர்கள் எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்தியும், பதினேழு மாணவர்கள் ஏழு பாடங்களில் அதிவிசேட சித்தியும் ஒரு பாடத்தில் விசேட சித்தியும் பெற்றுள்ளனர்.

இந்தக் கல்லூரியிலிருந்து மேற்படி பரீட்சைக்கு மொத்தம் 162 மாணவர்கள் தோற்றினார்கள்.

இவர்களில் 139 மாணவர்கள் ஜீ. சி. ஈ. உயர் தர விஞ்ஞான வகுப்புகளுக்கும், 15 மாணவர்கள் ஜீ. சி. ஈ. உயர் தர வணிக வகுப்புகளுக்கும் அனுமதி பெற தகுதி பெற்றிருக்கின்றனர். (உ-ஐ 70)

## இசை, நடன ஆசிரியர்களுக்கான

# நேர்முகப் பரீட்சை வெள்ளி வரை நடக்கும்

யாழ்ப்பாணம், நவ. 7

கொழும்பில் நடைபெறும் இசை, நடன ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றத் தவறியவர்கள் இவ்வாரம் வெள்ளிக்கிழமை வரை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

இந்தச் சலுகை வழங்கப்பட்டிருப்பதாக கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திரு ஆரியரத்ன யாழ். தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. மகாசிவத்திடம் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை குறித்தும், அதனால் பரீட்சார்த்திகள் எதிர்நோக்கியுள்ள அசௌகரியங்கள் பற்றியும் திரு. மகாசிவம், கல்விச் சேவை ஆணைக்குழு செயலாளருக்கு விளக்கினார்.

இதனையடுத்து இந்த வாரத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் சிங்கள பரீட்சார்த்திகளுடன் சேர்த்து வடக்கிலிருந்து செல்பவர்களுக்கும் நேர்முகப் பரீட்சை நடத்த இணக்கம் காணப்பட்டதாக அவர் தெரிவித்தார் (உ 9)

# வெள்ளவாயா கொலைகள்; 2 பொலீஸார் கைது!

கொழும்பு நவ. 7

வெள்ளவாயாவில் மூவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இரண்டு பொலீஸார் கைது செய்யப்பட்டனர்.

இரத்தினபுரி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு கான்ஸ்டபிள்களான ஈ.ஜி பி.கொத்தலாவல, டபிள்யு. எம். எஸ். கே வீரசேகரா ஆகியோரே அவர்கள்.

ஏற்கனவே இக்கொலைகள் தொடர்பாக முன்னாள் முதலமைச்சர் ஜி வி புஞ்சிநிலமேயின் புதல்வனான சுசந்தா புஞ்சிநிலமே கைது செய்யப்பட்டிருந்தார்.

பொலீஸ் அதிபர் காமினி வீரசிங்க தலைமையிலான விசேட புலனாய்வுப் பொலீஸார் இக்கொலைகள் சம்பந்தமான விசாரணையை நடத்தி வருகின்றனர். (உ எ)

## தடையை மீறிய மீனவர்கள் கைதாகிப் பின் விடுதலை

குருநகர், நவ. 7

தடையை மீறிக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றவர்கள் அவர்கள் பிடித்த மீன்களுடனும், அவர்களது உபகரணங்களுடனும் படையினர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் யாழ் மணியந்தோட்டப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

இவர்கள் அனைவரும் நான்கு வாகனங்களில் கொழும்புத்துறை துண்டிப் பகுதியில் உள்ள முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பின்னர் நேற்று நண்பகல் அளவில் வாகனங்களும் தொழிலாளர்களும் விடுவிக்கப்பட்ட போதும் கடற்றொழில் உபகரணங்கள் அவர்களிடம் மீள ஒப்படைக்கப்படவில்லையென அறியவந்தது.

கடற்றொழிலுக்கு அனுமதி வழங்கப்படும் பொழுது மேற்படி பொருள்கள் திரும்ப உரியவர்களுக்கு வழங்கப்படுமென்று படையினரால் தெரிவிக்கப்பட்டதாகவும் மீனவர்கள் தரப்பில் கூறப்பட்டது (உ-51)

# வெலிக்கடை சிறையில் கைதிகள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு. நவ. 7

வெலிக்கடைச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட கைதிகள் கடந்த வியாழக்கிழமை சிறைக் கூண்டுகளைவிட்டு வெளியேறி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஜே. வி. பி விடுத்த ஹர்த்தால்கோரிக்கைக்கு ஆதரவாகவே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## கோப்பாயில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பாய் — உரும்பராய் வீதிப் போக்குவரத்து நேற்றுக் காலை தடைப்பட்டது'

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த ஐ. செல்லத்துரை(வயது 63) என்ற வயோதிபர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். (உ-72-10)

## உமையாள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக மினிபஸ் ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்த வேறு இருஜவான் கன்வேறொரு மினிபஸ்ஸில் கிளிநொச்சிக்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து பயணிகள் ரயில் பரந்தனோடு கொழும்பு திரும்பியது. (உ-9 5)

## வெலிக்கடை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகள் ஈடுபட்டனர்.

சில சிறைச்சாலைக் காவலர்களை அவர்கள் பணயக் கைதிகளாகப் பிடித்திருப்பதாகவும்—

சிறைச்சாலை சமையல் அறையையும் வேலைத்தளத்தையும் அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே போன்ற ஆர்ப்பாட்டம் கண்டி போகம்பரைச் சிறையிலும் நடைபெற்று வருவதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ)

## நாடாளுமன்ற....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி பண்டாரநாயக்காவைச் சந்தித்தது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத் தக்கது. (உ-எ)

## பணயக் கைதிகள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்

இதனிடையில், சதிமுயற்சியில் ஈடுபட்ட கூலிப்படையினருக்கு 20 லட்சம் அமெரிக்க டொலர் கூலியாக பேரம் பேசப்பட்டதாக 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டது

சரணடைந்த 46 பேரில் கூலிப்படையின் தலைவரான அப்துல்லா லுக்காசியும் அவரின் துணைத் தலைவரான நாஸரும் இருக்கின்றனர் (உ-எ)

## கூலிப்படையினர்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவில்லை என்றும் ஜனாதிபதி கையூம் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

மாலேயில் சதி முயற்சி இடம்பெற்றபோது மூன்று கூலிப்படையினர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட ஏனைய கூலிப்படையினரின் சடலங்களை சகபாடிகள் கொண்டு சென்றுவிட்டனர்.

அரசு தரப்பில் 8 பாதுகாப்புப் படையினரும் 4 சிவிலியன்களும் மரணமடைந்தனர். 40 பேர் காயமடைந்தனர்.

இந்தியா காலம் அறிந்து செய்த உதவிக்கு நன்றி சொல்ல விரும்புகின்றேன்.

ஒளிந்து கொண்டிருக்கும் கூலிப்படையினரை பிடிக்கும் முயற்சியில் இந்தியப் படை ஈடுபட்டுள்ளது. இப்போது 20 கூலிப்படையினர் காவலில் உள்ளனர், என் முழுக் கட்டுப்பாட்டில் நாடு தற்போது உள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி கையூம் சொன்னார். (உ-எ)

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 25 12- 1972

இறப்பு: 20 10- 1987

திதி: 7 11- 1988

### இராசதுரை பிரபாகர்

அன்பு மகனே!

இம் மண்ணை விட்டு மின்னலென மறைந்து ஓராண்டாகி விட்டாலும் எங்கள் உள்ளங்களில் உம் நினைவு அணையாத் தீபமாய் நிலைத்து நிற்குதடா! உமது முதலாண்டுத் திதி நடைபெறும் இந்நாளில் உமது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்,

அன்பு அம்மா, அக்கா,
அம்மம்மா

ஞானவயிரவர் கோவிலடி,
உரும்பராய் தெற்கு,
உரும்பராய். (C/762)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா யோகநாதன் (யோகா)

கொக்குவில் பிரம்படி ஒழுங்கையைச் சேர்ந்த திரு. சுப்பையா யோகநாதன் 4-11 88 இல் காலமானார். இவர் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த காலம்சென்ற தம்பிமுத்து சுப்பையாவினதும் திருமதி பரமேஸ்வரி சுப்பையாவினதும் அருமைப் புதல்வரும் திரு. பாக்கியராஜா [சுங்கத் திணைக்களம் கொழும்பு] திரு நரேந்திரநாதன். [கணக்காளர் தெங்கு ப பொ. கூ. சங்கம் சாவகச்சேரி] திருமதி சகுந்தலாதேவி அருளானந்தம், திரு இராஜேந்திரநாதன் [தொலைபேசி இயக்குநர் யாழ் மாநகர சபை] திரு. சிவலோகநாதன் Bartleet Frighters Ltd, Colombo திரு செல்வநாதன் [கண்ணகனடா] ஆகியோரின் சகோதரரும் திரு அருளானந்தம் Satchchithananda Schokmen Pasupati & Co திருமதி லலிதா பாக்கியராசா, திருமதி கமலாம்பிகை நரேந்திரநாதன், திருமதி பாலசரஸ்வதி இராஜேந்திரநாதன், திருமதி பிரதீபா சிவலோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார் அன்னாரது ஈமக்கிரியைகள் கொக்குவில் பிரம்படி ஒழுங்கையில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் 5 11-88 அன்று நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திரு. சு. அருளானந்தம்
(மைத்துனர்)

(7808)

## P. J. அமிர்தநாயகம்

P. J அமிர்தநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.) காலமானார். இவர் அலெக்ஸ்சான்ரு (இளைப்பாறிய உப அதிபர் திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கில பாடசாலை யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் வினோதினி பாலேந்திரன். அலோசியஸ் புஷ்பராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், றேமன்ட் பாலேந்திரன் (மேற்கு ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற P. M வேதநாயகம், திருமதி றெஜினா சொர்ணம்மா நவரட்ணசிங்கம், முத்தம்மா சிங்கராயர், காலஞ்சென்ற அருட்திரு J. B. பாக்கியநாதர், மடாதிபதி, திருச்செபமாலை சபை ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி T. வேதநாயகம், அருட்செல்வி மேரிலுசிலா, (திருக்குடும்பக் கன்னியர், யாழ்ப்பாணம்.) திருமதி கிறிஸ்ரீன் பயஸ், திருமதி. பிளசம் மரியநாயகம் (ஸாம்பியா), C. V. E. நவரட்ணசிங்கம், M சிங்கராயர் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவர். அன்னாரின் நல்லடக்கம் 7-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் சேமக்காலையில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

திருமதி. அ. அமிர்தநாயகம்
128, வேம்படி வீதி
யாழ்ப்பாணம்,

(7801)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 07-11-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications(pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 7th November 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org